# TAMIL NAD PUBLIC SERVICE COMMISSION

**அறிவிக்கை எண்: 28/2012** **நாள்: 13.08.2012**

கீழ்க்காணும் பதவிக்கான காலிப் பணியிடங்களுக்கான நேரடித் தெரிவிற்கு 12-09-2012 அன்று வரை இணைய வழியில் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் மற்றும் குறியீட்டு எண் | பணியின் பெயர் மற்றும் குறியீட்டு எண் | காலிப் பணியிட எண்ணிக்கை | ஊதிய ஏற்ற முறை |
|---|---|---|---|
| வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) (குறியீட்டு எண்.1678) (2011-2012) | தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கப் பணி (குறியீட்டு எண்.015) | 454 + 6 பி/ப<br>பி/ப பணியிடங்கள்<br>ஆ.தி-பொது காது கேளாதோர்-1<br>ஆ.தி(பெ) காது கேளாதோர்-1<br>பி.வ.(பி.வ.மு.தவிர) பொது காது கேளாதோர்-1<br>பி.வ.(பி.வ.மு.தவிர)- (பெ) காது கேளாதோர்-1<br>மி.பி.வ./சீ.ம.-பொது-காது கேளாதோர் - 2 | ரூ.15600-39100 + தர ஊதியம் ரூ. 5400/- |

**<u>2, முக்கிய நாள்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| அ | அறிவிக்கை நாள் | 13.08.2012 | |
| ஆ | விண்ணப்பம் சமர்பிப்பதற்கான இறுதி நாள் | 12.09.2012 | |
| இ | வங்கி அல்லது அஞ்சலகம் மூலம் கட்டணம் செலுத்துவதற்கான இறுதி நாள் | 14.09.2012 | |
| ஈ | தேர்வு நடைபெறும் நாளும் நேரமும் | 28.10.2012 மு.ப. | முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை |

**3. <u>தகுதிகள்</u>**

(அ) வயது (01.07.2012 அன்றுள்ளபடி)

| வ.எண் | விண்ணப்பதாரர்களின் வகைகள் | குறைந்த நிலை வயது (நிறைவடைந்திருக்க வேண்டும்) | அதிக நிலை வயது |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் வகுப்பினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 18 வயது | வயது வரம்பு இல்லை |
| 2. | மேலே வ.எண் 1-இல் குறிப்பிட்டவர்கள் தவிர ஏனையோர் | 18 வயது | i. 30 வயது (நிறைவடைந்திருக்கக் கூடாது)<br>ii. வேளாண்மையில் எம்.எஸ்.சி., அல்லது பி.எச்.டி., போன்ற முதுநிலை பட்டப்படிப்பு அல்லது உயர் பட்டப்படிப்பு பெற்றுள்ளவர்களுக்கு 32 வயது (நிறைவடைந்திருக்கக் கூடாது) |

**<u>குறிப்பு:</u>**

<u>முறையான அரசுப்பணியிலுள்ளோர் தகுதி:</u>

மாநில/மத்திய அரசில் முறையாக (Regular) ஐந்தாண்டுகள் பணிபுரிந்துள்ள *(ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அ), பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்)ஆகிய பிரிவுகளைச் சாராத ஏனையோர்* வயது வரம்பக்குட்பட்டிருந்தாலும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவராவர்.

**(ஆ) <u>கல்வித் தகுதி</u>** <u>(13.08.2012 அன்றுள்ளபடி)</u>

பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்காணும் கல்வித் தகுதி அல்லது அதற்கு ஈடான கல்வித் தகுதி பெற்றிருக்கவேண்டும்.

| பதவியின் பெயர் | கல்வித் தகுதி |
|---|---|
| வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) | வேளாண்மையியலில் இளங்கலை பட்டம்<br>மற்றும்<br>தமிழில் போதுமான அளவிற்கு மொழி அறிவு பெற்றிருக்க வேண்டும்* |

***விளக்கம்:** போதுமான மொழியறிவு என்பது, விண்ணப்பதாரர்கள் பள்ளியிறுதித் தேர்வில் தமிழை ஒரு பாட மொழியாக எடுத்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பள்ளியிறுதிவகுப்பு பொதுத்தேர்வை தமிழில் எழுதி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் துறைத் தேர்வுகளில் ஒன்றான 2ம் நிலை தமிழ்மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் விண்ணப்பதாரர்களுக்கான வழிமுறைகளில் பத்தி 10ல் கீழ் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு இந்த பணிக்கு பொருந்தாது.

<u>குறிப்பு</u>

(i) இந்தப் பதவிக்கான கல்வித்தகுதியை பத்தாம் வகுப்பு, மேல்நிலைக்கல்வி பட்டப்படிப்பு என்ற வரிசையில் பெற்றிருக்க வேண்டும்.

(ii) ஈடான கல்வித் தகுதி பெற்றுள்ளதாகக் கோரும் விண்ணப்பதாரர்கள் அதற்கான சான்றினை
கேட்கும்போது அனுப்ப வேண்டும். மேலும் விவரங்களுக்கு விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி எண் 9ஐ காணவும்.

**4. <u>பொது தகவல்கள்</u>**

அ. காலிப்பணியிட பகிர்வு, நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்பற்றப்பட்டும்.

ஆ. அரசாணை (நிலை) எண்.145, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.09.2010-இல் நேரடி நியமனத்தில் அனைத்து காலிப் பணியிடங்களில் 20% காலி பணியிடங்கள் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை தமிழ்வழியில் படித்தவர்களைக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் நிரப்ப அரசு ஆணையிட்டுள்ளது். தமிழ் வழியில் படித்தவர்களுக்கான 20% முன்னுரிமை ஆணை இத்தெரிவிற்கு பொருந்தும்.

இ. அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். இறுதித் தெரிவிற்கு முன்புவரை எல்லா நிலையிலும் இவ்வெண்ணிக்கை (குறைப்பு உட்பட) மாறுதலுக்கு உட்பட்டது.

ஈ. தகுதி வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப் பெறாநிலையில் பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட காலியிடங்கள் அதே சாதிப் பிரிவைச் சார்ந்த தகுதிவாய்ந்த் ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு தெரிவு செய்யப்படும்.

**உ. <u>உடற்கட்டுத்தகுதிச் சான்றிதழ்</u>**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட படிவத்தில் உடற்கட்டுத்தகுதிச் சான்றினை அளிக்க வேண்டும்.

| பதவியின் பெயர் | நிர்ணயிக்கப்பட்டுள்ள பார்வையின் தரம் | உடற்கட்டுத்தகுதிச் சான்றிதழ் படிவம் |
|---|---|---|
| **வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்)** | பார்வை தரம் III | செயல் அலுவலர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட படிவம் |

நிறக்குருடு குறைபாடுள்ளவர்கள், இப்பதவிக்கு தகுதியற்றவராவர். பிற வகையில் கண்பார்வை குறைபாடுடைய விண்ணப்பதாரர்கள் தகுதி வாய்ந்த கண் மருத்துவ நிபுணரிடம் (Specialist) கண்பார்வை தகுதி குறித்த சான்றினைப் பெற்று அளிக்க வேண்டும்.

எ. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின், 11.04.2005 நாளிட்ட அரசாணை நிலை எண். 53-இல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி, காது கேளாதோர், கை, கால் ஊனமுற்றோர் ஆகிய மாற்றுத்திறனாளிகள் இப்பதவிக்கு தகுதியுள்ளவர்களாக அறியப்பட்டுள்ளனர். எனவே மாற்றுத்திறனாளிகளுக்கான 3 % இட ஒதுக்கீட்டு விதி இப்பதவிக்கு பொருந்தும்.

ஐ. "ஆதரவற்ற விதவைகள் " மற்றும் "முன்னாள் இராணுவத்தினர்க்கான" இட ஒதுக்கீட்டு விதி இப்பதவிக்கு பொருந்தாது.

ஒ. அருந்ததியர்கள், முன்னுரிமை வரிசை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் முதலில் நிரப்பப்படுவர் அதற்கு மேலும் போட்டியடிப்படையில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் அவ்வகுப்பினரில் இருப்பின், அவ்விண்ணப்பதாரர்கள், பிற ஆதிதிராவிட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டிலும் போட்டித் தகுதி அடிப்படையில் நிரப்பப்படுவர். அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாத சூழலில் அப்பணியிடங்கள் பிற ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

ஓ. தெரிவு குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் (விண்ணப்பதாரர்நிலை அல்லது / மற்றும் விண்ணப்பப்படிவத்தில் கோரிய உரிமை தவிர) தெரிவு முடிவுகள் வெளியிடப்பட்ட 90

நாட்களுக்குள் அனுப்ப வேண்டும். 90 நாட்களுக்குப் பின்பு பெறப்படும் தெரிவு குறித்த எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படாது.

5. <u>எழுத்துத் தேர்வுத் திட்டம் (கொள்குறி வகை) மற்றும் நேர்முகத் தேர்வுத் திட்டம்:-</u>

| தேர்வு | கால அளவு | அதிகளவு மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற, பெறவேண்டிய குறைந்தளவு மதிப்பெண்கள் | |
|---|---|---|---|---|
| | | | ஆதி,.ஆ.தி.(அ)., ப கு, மிபிவ/ சீ.ம., பி.வ மற்றும் பி.வ.(மு) | இதர வகுப்பினர் |
| <u>எழுத்துத் தேர்வு</u><br>கீழ்கண்ட பாடத்தில் ஒரு தேர்வு (பட்டப் படிப்புத் தரம்-200 வினாக்கள்) (கொள்குறிவகை) வேளாண்மையியல் (குறியீட்டு எண்-011) | 3 மணி நேரம் | 300 | 102 | 136 |
| **நேர்முகத் தேர்வு மற்றும் ஆவணங்கள்** | | 40 | | |
| மொத்தம் | | 340 | | |

<u>குறிப்பு :</u>

(i) கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்திட்டத்திற்குரிய தாள் - I மற்றும் தாள் - II ஆகியவை இணைக்கப்பட்டு ஒரே பாடத்திட்டமாக தொகுக்கப்பட்டுள்ளது.விண்ணப்பதாரர்கள் மேற்படி பாடத்திட்டத்தில் (ஆங்கிலத்தில் மட்டும்) தயாரிக்கப்பட்ட ஒரு வினாத்தாளுக்கு விடையளிக்க வேண்டும்.

(ii) பாடத்திட்டம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய 16.05.2001 நாளிட்ட செய்தி அறிவிப்பு வெளியீட்டில் கீழ்க்கண்டவாறு வெளியிடப்பட்டுள்ளது.

| பாடம் | குறியீட்டு எண் | பக்கம் |
|---|---|---|
| வேளாண்மையியல் | 011 | 738 |

பாடத்திட்டம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணையதளத்திலும் www.tnpsc.gov.in - வெளியிடப்பட்டுள்ளது.

**6. <u>தேர்வு நடுவங்கள்</u>**

எழுத்துத் தேர்வு கீழ்க்கண்ட தேர்வு நடுவங்களில் நடைபெறும் :

| தேர்வு நடுவத்தின் பெயர் | தேர்வு நடுவத்தின் குறியீடு | தேர்வு நடுவத்தின் பெயர் | தேர்வு நடுவத்தின் குறியீடு | தேர்வு நடுவத்தின் பெயர் | தேர்வு நடுவத்தின் குறியீடு |
|---|---|---|---|---|---|
| சென்னை | 001 | மதுரை | 010 | திருச்சிராப்பள்ளி | 025 |
| கோயம்புத்தூர் | 002 | சேலம் | 017 | திருநெல்வேலி | 026 |

<u>குறிப்பு</u>

தேர்வு நடுவங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ, குறைக்கவோ அல்லது விண்ணப்பதாரர்களை வேறு நடுவங்களுக்கு ஒதுக்கீடு செய்யவோ தேர்வாணையத்திற்கு உரிமையுண்டு.

**7. <u>தெரிவு முறை</u>**

தெரிவு இரண்டு நிலைகளை உடையது.

(i) எழுத்துத் தேர்வு நிலை

(ii) நேர்முகத் தேர்வு நிலை

(மேலும் விபரங்களுக்கு விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில் பத்தி 21(b) ஐக் காணவும்)

**8. <u>தேர்வுக் கட்டணம்</u>**

- ரூ.175/- ( ரூபாய் நூற்று எழுபத்தைந்து மட்டும்) செலுத்த வேண்டும், (விண்ணப்பக்கட்டணம் ரூ. 50/- + தேர்வுக் கட்டணம் ரூ.125/-).
- தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு கோரும், தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணம் ரூ.50/-ஐ செலுத்த வேண்டும். (விண்ணப்ப கட்டணத்திற்கு விலக்கு அளிக்கப்பட வில்லை.
- விண்ணப்பதாரர்கள், வங்கி அல்லது அஞ்சல் அலுவலகம் அல்லது கட்டணம் செலுத்தும் முகமை ஆகியவைகளுக்கான சேவைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.

நிரந்தரப் பதிவு முறையில் (One-Time Registration) ஏற்கெனவே பதிவு செய்து ரூ. 50/-ஐ பதிவுக் கட்டணமாக செலுத்தி பதிவெண் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் அவ்வசதியினைப் பெற்ற நாளிலிருந்து 5 வருட காலத்தில் தேர்வாணையம் அறிவிக்கும் எந்தப் பதவிக்குமான அறிவிக்கைக்கும் விண்ணப்பிக்கும் பொழுது <u>விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தத் தேவையில்லை என்பதால், தற்போது விண்ணப்பக்கட்டணம் (ரூ.50/-) செலுத்தத்</u>

தேவையில்லை, ஆனால், தேர்வுக் கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து விலக்கு கோருபவர் தவிர, மற்றனைவரும் தேர்வுக் கட்டணத்தைச் (ரூ. 125/-) செலுத்த வேண்டும்.

(மேலும் விவரங்களுக்கு தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 12 ஐ காண்க)

9. **தடையின்மைச் சான்றிதழ்**

தேர்வாணையத்தின் "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 15 (எ)ல் உள்ள விதிமுறைகளைக் காண்க.

10. **சலுகைகள்**

ஆதிதிராவிடர், ஆதிதிராவிட(*அருந்ததியர்கள்*, பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட *முஸ்லீம்* வகுப்பினர், ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மற்ற வகையினைச் சார்ந்தவர்களுக்கான வயது மற்றும் / அல்லது கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில் 12 முதல் 14 வரையில் உள்ளப் பத்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

11. **விண்ணப்பிக்கும் முறை**

- விண்ணப்பதாரர்கள் இணையவழியில் மட்டுமே தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in அல்லது www.tnpscexams.net மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் முன், அண்மையில் எடுக்கப்பட்ட தங்களது புகைப்படம் மற்றும் கையொப்பத்தின் படிம நகல்களை (Scanned images) குறுந்தகடு / இலக்கமுறை குறுந்தகடு / பேனா இயக்கி (CD/DVD/Pen Drive) போன்ற தகவல் சேமிப்பு சாதனங்களில் விண்ணப்பதாரர்கள் சேமித்து வைத்திருக்கவேண்டும்.
- இணைய வழி விண்ணப்பத்தினை பதிவு செய்ய சரியான மின் அஞ்சல் முகவரியோ அல்லது கைப்பேசி எண்ணோ அவசியமானதாகும். தெரிவு முடிவுகள் வெளியிடப்படும்வரை விண்ணப்பதாரர்கள் தங்களது மின்அஞ்சல் முகவரியை பயன்பாட்டு நிலையில் வைத்திருக்க வேண்டும். தேர்வாணையம், விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத்தேர்வில் கலந்து கொள்வதற்கான தேர்வுக் கூட நுழைவுச்சீட்டு (அனுமதி குறிப்பாணை), நேர்காணல் தேர்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பாணை மற்றும் பிற குறிப்பாணைகள் போன்றவற்றை

விண்ணப்பதாரர்களால் பதிவு செய்யப்பட்ட மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் அவற்றை தேர்வாணைய இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் விண்ணப்பதாரரின் பெயர், விண்ணப்பிக்கும் பதவி, இனம், பிறந்த நாள், முகவரி, மின்அஞ்சல் முகவரி, தேர்வு மையம் உள்ளிட்ட விவரங்கள் அனைத்தும் இறுதியானதாகக் கருதப்படும். இணைய வழியாக விண்ணப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இறுதி நாளுக்குப் பின்னர் எவ்வித மாறுதலும் செய்ய அனுமதியில்லை. மேலும், சில முக்கிய விவரங்கள் அடங்கிய புலங்களை (Fields) பின்னர் மாற்ற முடியாது என்பதால் விண்ணப்பத்தினை நிரப்பும்போது, தேர்வர்கள் மிகுந்த கவனத்துடன் நிரப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இது தொடர்பாக விண்ணப்பதாரர்களால் மேற்கொள்ளப்படும் எந்த வித கடிதத் தொடர்பும் கவனிக்கப்படாது.
- குறுஞ்செய்திகளைப் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் தங்களது கைப்பேசி எண்ணை விண்ணப்பத்தில் தெரிவிக்க வேண்டும்.

11. (அ) <u>**இணைய வழியில் விண்ணப்பிக்கும் வழி முறை**</u>

1. விண்ணப்பதாரர்கள் முதலில் தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in அல்லது www.tnpscexams.net எனும் முகவரியை அணுகவும்.
2. இணையவழி விண்ணப்பத்தினைக் கண்ணுற "இணையவழி மூலம் விண்ணப்பம்" எனும் புலத்தை சொடுக்கவும்.
3. விண்ணப்பிக்க விரும்பும் பதவி அல்லது பணித் தொகுதியை தெரிவு செய்யவும்.
4. நீங்கள், ஏற்கெனவே நிரந்தரப் பதிவு முறையின் (One-Time Registration) மூலம் தனித்துவ / பிரத்யேக எண் பெற்றிருப்பின், அந்த எண்ணையும், கடவுச் சொல்லையும் (Password) பதிவு செய்து, ஏற்கெனவே உள்ள விவரங்களைக் காணவும், தேவையெனில் தகுந்த மாறுதல் (Update) செய்யவும்.
5. நீங்கள் தகுந்த தனித்துவ / பிரத்யேக எண்ணைப் பெற்றிருக்கவில்லையெனில், எந்தப் புலத்தையும் விடுபடாமல் அனைத்து தேவையான விபரங்களையும் பதிவு (Enter) செய்யவும்.
6. "புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றை படிம நகல் எடுப்பதற்கான வழிகாட்டல்கள்" என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தங்களது புகைப்படம் மற்றும் கையொப்பத்தை பதிவேற்றம் செய்யவும். புகைப்படம் மற்றும் கையொப்பம் இணைக்கப்படாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11(ஆ) <u>**கட்டணம் செலுத்தும் முறை**</u>

விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தும் முறையை தெரிவு செய்யவும் (**நேரடி அல்லது இணையவழி**)

11(இ) **<u>இணைய வழியில் செலுத்தும் முறை (இணைய வழி வங்கிச் சேவை / கடன் அட்டை / பற்று அட்டை</u>**

(i) இணைய வழி வங்கிச் சேவை (Net Banking), கடன் அட்டை (Credit Card), பற்று அட்டை (Debit Card) ஆகியவற்றின் வாயிலாக தேர்வுக் கட்டணம் செலுத்துபவரின் கவனத்திற்காக விண்ணப்பத்தில் கூடுதல் பக்கம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தவும்.

(ii) கட்டணம் தொடர்பான விபரங்களை இணைய வழி விண்ணப்பத்தில் நிரப்பியவுடன் சேவையகத்திடமிருந்து (Server) தகவல் வரும் வரை காத்திருந்து செயல்படவேண்டும். (காத்திருக்காமல் 'முந்தைய' (Back) அல்லது புதுப்பி (Refresh) பொத்தானை அழுத்தினால், இரட்டிப்பு கட்டணம் செலுத்த நேரிடும்).

(iii) இணைய வழி தொடர்பான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடிவுற்றவுடன் ஒரு பதிவு எண்ணும், கடவுச்சொல்லும் (Password) காணக்கிடைக்கும். விண்ணப்பதாரர்கள் எதிர்காலத் தொடர் பயன்பாட்டிற்காக பதிவு எண்ணையும், கடவுச்சொல்லையும் குறித்து வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

11(ஈ) **<u>நேரடிக் கட்டணம் செலுத்தும் முறை (அஞ்சல் அலுவலகம் அல்லது இந்தியன் வங்கி மூலம்)</u>**

(i) நேரடிக் கட்டணம் செலுத்தும் முறையைத் தேர்ந்தெடுக்கும் விண்ணப்பதாரர்கள் கட்டணத்தைச் செலுத்த குறிப்பிடப்பட்ட அஞ்சலகம் அல்லது இந்தியன் வங்கியைத் தேர்ந்தெடுக்கலாம்

(ii) விண்ணப்பத்தை சமர்ப்பிக்க **<u>'சமர்ப்பி'</u>** (SUBMIT) எனும் புலத்தினைச் சொடுக்கவும்.

(iii) விண்ணப்பதாரர்களுக்கு ஒரு பதிவு எண்ணும், ஒரு கடவுச் சொல்லும் வழங்கப்படும். இவற்றைக் குறித்து வைத்துக் கொள்ளுமாறு விண்ணப்பதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(iv) விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தவுடன் தோன்றும் செலுத்துச் சீட்டின் அச்சுப்படி (Print Out) எடுத்து அருகாமையிலுள்ள இந்தியன் வங்கி கிளைக்கோ அல்லது குறிப்பிடப்பட்டுள்ள அஞ்சலகத்திற்கோ சென்று இரண்டு நாட்களுக்குள் கட்டணத்தைச் செலுத்தவும்.

(v) பின்னர், விண்ணப்பதாரர்களுக்குரிய செலுத்துச் சீட்டினை வங்கி அல்லது அஞ்சலகக் கிளையிலிருந்து பெற்று, அதில் செலுத்துச் சீட்டு முறையாக ஒப்பமிடப்பட்டுள்ளதா எனவும், நடவடிக்கை எண், கிளையின் பெயர், டி.பி. (DP)குறியீட்டு எண், பணம் செலுத்திய நாள் ஆகியவை சரியாக குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்யவும்.

(vi) பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குள் அஞ்சலகத்திலோ, இந்தியன் வங்கியிலோ கட்டணம் செலுத்தப்பட்டால் மட்டுமே விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் வெற்றிகரமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும்/ஏற்கப்படும்.

**11. (உ) <u>அச்சுப்படி எடுத்தல்</u>**

1) தேவைப்படின், தங்களது பதிவு எண், கடவுச்சொல் ஆகியவற்றைக் கொண்டு விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்யவோ, அச்சுப்படி எடுக்கவோ இயலும்.

2) விண்ணப்பதாரர்கள் தங்களது இணையவழி அச்சுப்படியினையோ, பிற தொடர்புடைய ஆவணங்களையோ தேர்வாணையத்திற்கு தனியாக அனுப்பத் தேவையில்லை. விண்ணப்பதாரர்கள் அடுத்தக்கட்ட தெரிவிற்கு தகுதிபெறும் நிலையில் மட்டுமே அவர்களுடைய சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும்.

<u>குறிப்பு</u>

I. தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் இறுதி நாள் வரை காத்திருக்காமல் முன் கூட்டியே விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்பதாரர்கள், இணைய வழியில் விண்ணப்பிக்கும்போதும் தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் செலுத்தும்போதும் இணைய / வலைதள நெரிசலினால் தேர்வாணையத்தின் வலைதளத்தை தொடர்பு கொள்ள இயலாமை/தொடர்பு

துண்டிக்கப்படுதல் ஆகியவற்றைத் தவிர்க்க இறுதி நாள் வரை காத்திராமல் முன்கூட்டியே விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

II. மேலே குறிப்பிட்ட காரணங்களினால் விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை உரிய காலகட்டத்திற்குள் (அ) இறுதி நாளுக்குள் சமர்ப்பிக்க இயலாத சூழல் ஏற்படின் அத்தகைய காரணங்களுக்கு தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது. இதைத்தவிர வேறு ஏதேனும் காரணங்களினால் ஏற்படும் கால தாமதத்திற்கும் தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

III. விண்ணப்பதாரர்கள் அவரவர்க்கென தனியாக ஒரு மின்னஞ்சல் முகவரி வைத்திருக்க வேண்டும். அத்தகைய மின்னஞ்சல் முகவரி இல்லாத விண்ணப்பதாரர்கள் தங்களுக்கென தனியாக ஒரு மின்னஞ்சல் முகவரியை விண்ணப்பிப்பதற்கு முன் ஏற்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். எத்தகைய சூழ்நிலையிலும் தங்களது மின்னஞ்சல் முகவரி/அலைபேசி எண்ணை வேறொருவருடன் பகிர்ந்துகொள்ளவோ வேறொருவருக்குத் தெரிவிக்கவோ வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

IV. இணைய வழி விண்ணப்பத்தில் ஏதேனும் மாறுதல்கள் அல்லது திருத்தங்கள் செய்யவேண்டி இருப்பின் அவற்றைத் திருத்திக்கொள்ளும் வகையில் இணைய வழி விண்ணப்பம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே விண்ணப்பதாரர்கள் தங்கள் குறித்த விவரங்களில் ஏதேனும் மாறுதல் செய்யப்பட வேண்டி இருப்பின் மேற்கூறிய வசதியினைப் பயன்படுத்தி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் வரை மாறுதல் செய்து கொள்ளலாம். இறுதி நாளுக்குப் பிறகு எத்தகைய மாறுதலும் செய்ய இயலாது என்பதால் அறிவிக்கையில் அறிவிக்கப்பட்ட பதவிக்கு விண்ணப்பதாரர்கள் மிகுந்த கவனத்துடன் இணைய வழி விண்ணப்பத்தினை நிரப்புமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும் தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் குறித்த விவரங்களை அதற்குரிய கலத்தில் மிகுந்த கவனத்துடன் நிரப்ப வேண்டும். அத்தகைய கலங்களுக்கான புலங்கள் எத்தகைய மாறுதலும் செய்யவோ, திருத்தவோ இயலாத வகையில் உருவாக்கப்பட்டிருப்பதனால் மிகுந்த கவனத்துடன் நிரப்புமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட்ட விவரங்கள் அல்லது அதில் ஏற்படும் தவறுகளுக்கு தேர்வாணையம் பொறுப்பாகாது மேலும் அது குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படாது.

V. விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தில் உள்ள அனைத்து கலங்களிலும் தங்கள் குறித்த விவரங்களை மிகுந்த கவனத்துடன் தவறாமல் நிரப்ப வேண்டும். குறிப்பாக தங்களுடைய பெயர், ஆண் / பெண், தந்தையின் பெயர் / கணவர் பெயர் மற்றும் ஏனைய விவரங்களில் தவறு ஏற்படா வண்ணம் சான்றிதழ்களில் உள்ளவாறு பதிவு செய்யப்பட வேண்டும். அனைத்து விவரங்களும் நிரப்பப்பட்ட பின் இறுதியில் சமர்ப்பிக்கவும் (submit) என்ற பொத்தானை அழுத்துவதற்கு முன்

மீண்டும் ஒரு முறை அனைத்து கலங்களும் நிரப்பப்பட்டிருக்கிறதா என்று சரிபார்த்த பின்னரே சமர்ப்பிக்கவும் (submit) என்ற பொத்தானை இறுதியாக அழுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

VI. நிரப்பப்பட்டு அனுப்பப்பட்ட இணையவழி விண்ணப்பப்படிவத்தில் திருத்தம்/மாறுதல் செய்வதற்காக கூறப்பட்ட இறுதி நாளுக்குப் பிறகு திருத்தம்/மாறுதல் கோரும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாது. தவறான/முழுமையற்ற விவரங்களை நிரப்பியிருப்பது அல்லது தேவைப்படும் விவரங்களை விண்ணப்பப்படிவத்தில் நிரப்பாமல் விட்டது ஆகிய குறைகள் உள்ள விண்ணப்பங்கள் குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கைக்கும் தேர்வாணையம் பொறுப்பாகாது.

VII. இணைய வழியில் தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் ஏற்படும் தவறுகளுக்கும் தேர்வாணையம் பொறுப்பாகாது.

VIII. விண்ணப்பித்தல் குறித்த விவரங்களுக்கும் ஐயங்களுக்கும் தேர்வாணையத்தின் உதவி மைய எண் 1860 345 0112-ஐ தொடர்பு கொள்ளலாம்.

12. <u>ஏனைய முக்கிய அறிவுரைகள்</u>

**அ.** <u>**விண்ணப்பதாரர்கள் தேர்விற்கான தங்களுடைய தகுதிகளை உறுதிசெய்தல்:-**</u>

தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் அத்தேர்விற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளோமா என உறுதி செய்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு நிலையிலான அனுமதியும், அவர்களின் தகுதி நிறைவானதென உறுதி செய்யப்படும்வரை தற்காலிகமானதுதான். தேர்விற்கான அனுமதிச்சீட்டு வழங்குவதால் அவர்களின் விண்ணப்பதாரர்நிலை தேர்வாணையத்தால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது எனக் கருதிவிடக் கூடாது.

**ஆ.** <u>**விண்ணப்பிக்கும் முறை:-**</u> விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தின் இணையதள முகவரியான <u>www.tnpsc.gov.in</u> - யை பயன்படுத்தி இணையவழியில் விண்ணப்பிக்கலாம். இணையவழியில் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கான விரிவான அறிவுரைகள் யாவும் இவ்வறிவிக்கையின் பத்தி 11 ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**இ.** தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கான தேர்வுக் கூட அனுமதிச்சீட்டினை தேர்வாணையத்தின் இணையதள முகவரியான <u>www.tnpsc.gov.in</u> -இல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **அஞ்சல் வழியாக தேர்வுக் கூட அனுமதிச்சீட்டு தனியாக அனுப்பிவைக்கப்படாது.**

**ஈ.** விண்ணப்பதாரர்களுக்கான குறை தீர்ப்பு மையத்தின் மூலம் விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தினை, நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண். 044-28297591-92, 044-28297584-86 வழியாகவோ அல்லது

தேர்வாணையத்தின் கட்டணமில்லா தொலைபேசி சேவை எண். 1800 425 1002 மூலமாகவோ, தங்களுடைய விண்ணப்பம் தொடர்பான / வழிகாட்டல் / தகவல் / கருத்து ஆகியனவற்றை குறித்தும் எல்லா வேலை நாள்களிலும் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.45 மணி வரை தொடர்பு கொண்டு உரிய தகவலை பெற்றுக்கொள்ளலாம்.

**உ. <u>கைப்பேசி மற்றும் ஏனைய பொருட்களுக்குத் தடை</u>**

(i) விண்ணப்பதாரர்கள் அகவி, கைப்பேசி, கணிப்பான், ஞாபகக் குறிப்புகள், புத்தகங்கள், மின்னணு கருவிகள், பதிவுக் கருவிகள் ஆகியவற்றைத் தனியாகவோ விண்ணப்பதாரரின் மோதிரம் அல்லது கைக்கடிகாரத்தின் இணைப்பாகவோ தேர்வுக்கூடத்திற்குக் கொண்டுவர தடைசெய்யப்படுகிறது.

(ii) அவ்வாறான பொருட்களை தேர்வுக்கூடத்தில் வைத்திருப்போர் காணப்பட்டால் அவர்கள் தொடர்ந்து தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் அவர்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் வருங்கால தேர்வுகளுக்கு விலக்கியும் வைக்கப்படுவர். தேவைப்படின் அவ்விடத்திலேயே சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

(iii) தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்பட்ட எழுது பொருளான எழுதுகோல் (பேனா) தவிர (வண்ண எழுதுகோல் அல்லது பென்சிலாக அல்லாமல்) புத்தகங்கள், குறிப்புகள், தனித் தாள்கள், கணித மற்றும் வரைபடக் கருவிகள், மடக்கை அட்டவணை, படியெடுக்கப்பட்ட வரைபடம், காட்சிவில்லைகள், பாடப்புத்தகங்கள், பொதுக் குறிப்பு தாட்கள் ஆகியவற்றைக் கொண்டுவரக் கூடாது.

(iv) தடைசெய்யப்பட்ட பொருட்களை எடுத்துவரும்வேளையில் அப்பொருட்களை பாதுகாப்பதற்கான எவ்வித சிறப்பு ஏற்பாடுகள் செய்துதர உத்தரவாதம் அளிக்க இயலாது என்று தெரிவிக்கப்படுவதுடன் விண்ணப்பதாரர்கள் தடை செய்யப்பட்ட பொருட்களை தேர்வுக் கூடத்திற்குள் கொண்டுவர வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**ஊ.** விண்ணப்பதாரர்கள், தங்களது வயது, கல்வித்தகுதி, பட்டறிவு, சாதீ மற்றும் உடற்கட்டுகுறைபாடு தொடர்பான சான்றிதழ் போன்ற சான்றிதழ்களை, விண்ணப்பத்துடன் அனுப்பத் தேவையில்லை. அவற்றை தேர்வாணையம் கேட்கும் தருணத்தில் அளித்தால் போதுமானது. தேர்விற்கு விண்ணப்பிப்பவர்கள் அத்தேர்விற்கு அனுமதிக்கப்படத் தகுதியுள்ளவர் என்பதை உறுதி செய்துகொள்ளவேண்டும். விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களைத் தேர்வாணையம்

ஐயமறத் தெளிந்துகொள்ளும்வரை அவர்களின் விண்ணப்பம் எழுத்துத் தேர்விற்கும், நேர்முகத் தேர்விற்கும் (அதாவது எல்லா நிலைகளிலும்) தற்காலிகமாகவே ஏற்கப்படும். விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்படும் தகவல்கள் போதுமானதல்ல அல்லது ஏற்கத்தகுந்த காரணங்கள் இல்லை அல்லது, நியமனத்திற்கு போட்டியிடத் தகுதியற்றவர் எனத் தேர்வாணையத்தால் கண்டறியப்பட்டால், எந்நிலையிலும், (அதாவது தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட) விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**எ.** தவிர, விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறு எனக் கண்டறியப்பட்டால் அவ்விண்ணப்பதாரர்கள் மீது ஒழுங்கு/குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

**ஏ.** **ஒழுங்கீனச் செயல்களுக்குத் தடை:-** தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுதவோ அல்லது மற்ற விண்ணப்பதாரர்கள் தன்னுடைய விடைத்தாளிலிருந்து பார்த்து எழுத அனுமதிக்கவோ அல்லது வேறு ஏதேனும் முறையற்ற உதவிகளைப் பெறவோ அல்லது பெற முயற்சிக்கவோ அல்லது அத்தகைய முறையற்ற உதவிகளைத் தரவோ அல்லது தர முயற்சிக்கவோ கூடாது. மீறும் விண்ணப்பதாரர்கள், தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் மற்றும் தெரிவுகளில் அவர்களின் உரிமையை தேர்வாணையம் முடிவு செய்யும் ஒரு குறிப்பட்ட காலத்திற்கு இழக்க நேரிடும்.

**ஐ.** **தேர்வுக் கூடத்தில் நடந்து கொள்ளும் முறை:-** தேர்வு எழுதும் எந்த ஒரு விண்ணப்பதாரரும் தேர்வுக் கூடத்தில் தவறான நடவடிக்கையிலோ அல்லது தேர்வினைச் சீர்குலைக்கும் நோக்கத்திலோ அல்லது தேர்வாணையத்தால் தேர்வினை நடத்தப் பணியில் அமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களை துன்புறுத்தும் முயற்சியிலோ ஈடுபடும் செயல்கள் கடுங்குற்றமாக கருதப்பட்டு அவ்விண்ணப்பதாரர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

**இணையவழி மூலம் 12.09.2012 அன்று இரவு 11.59 மணி வரை விண்ணப்பிக்கலாம். அதன்பின், அதற்கான சேவை நிறுத்தப்படும்.**

(மேலும் கூடுதல் தகவல்களுக்கு விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளை தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in -ல் காணலாம்)

*செயலாளர்*